## அன்பு ஆண்டவருக்கான

# அடக்க ஆராதனை



# அன்பு ஆண்டவருக்கான அடக்க ஆராதனை

## [நேசரின் நினைவாக...]

*பாட ஆதாரம் : Christian Resources App > Audio Sermons > “Aaron Kuehmichel – In Memorium – 2015 Parker – Saline County Convention”)*

***English version :***

***Christian Resources App***
***(Bro.Aaron Kuehmichel)***

***Tamil Translated by :***
***www.foodfornewcreature.com***

# அன்பு ஆண்டவருக்கான அடக்க ஆராதனை

## [நேசரின் நினைவாக...]

ஒருவேளை கர்த்தராகிய இயேசுவிற்கென்று ஓர் இறுதி அடக்க ஆராதனை *(funeral service)* நடந்து, அதில் நீங்கள் கலந்துகொள்ள உங்களுக்கு அனுமதி கிடைத்தால், அதை நடத்தும் ஊழியனோ அல்லது போதகரோ என்ன சொல்ல வேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்கள்? ஒருவேளை நேசருக்கான அடக்க ஆராதனையை நடத்தும் பாக்கியம் உங்களுக்கு கிடைத்தால், நீங்கள் என்ன சொல்வீர்கள்? அவர் தமது மூன்றரை ஆண்டு ஊழியத்தில் கொடுத்த அனைத்து போதனைகளையும், செய்த அனைத்து அற்புதங்களையும் எவ்வாறெல்லாம் ஓர் அடக்க ஆராதனை பேச்சிற்குள் சுருக்கிக் கூறுவீர்கள்? அவருடைய போதனைகளில் அல்லது அற்புதங்களில் எவற்றை மிகவும் முக்கியமானதாக எண்ணிப்பார்ப்போம்? ஆம்! நமது கர்த்தராகிய இயேசுவை நினைவுகூரும் வண்ணமாக இருக்கும் இந்த அடக்க ஆராதனை பாடத்தில் அந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதிலளிக்க முயற்சித்துள்ளோம்.

**Carl Bloch வரைந்த 'கிறிஸ்துவின் நல்லடக்கம்'**



## தன்னிகரில்லாத மனிதருள் மாணிக்கம்

நண்பர்களே, இப்பூமியில் ஒப்பில்லாத வாழ்க்கை வாழ்ந்து, ஈடுபலியாக மரித்த அந்த ஒரு மனிதனுக்காக நாம் இங்கு கூடியிருக்கிறோம். அவர் தன்னிகரில்லாத ஒரு மனிதனாவார். அவரது இந்த வாழ்க்கை நம் ஒவ்வொருவர்மீதும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது – முழு மனுக்குல வரலாற்றின் போக்கையும், தனித்தனியாக நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் மாற்றியமைக்குமளவிற்கு அது மிகவும் ஆழமானதாக இருந்தது. அவர் இல்லையென்றால், நாம் இப்போது இருப்பது போல் இருந்திருக்க மாட்டோம், இப்போது இதை வாசித்துக் கொண்டிருக்கவும் மாட்டோம்.

அவரைக் குறித்தே பின்வருமாறு பதிவு செய்யப்பட்டுள்ளது: **“அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை.” (அப்போஸ்தலர் 4:12)**

யோவான் ஸ்நானகன் கிறிஸ்து இயேசுவைப் பற்றி பின்வருமாறு சாட்சியளித்தார்: **“குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்.” (யோவான் 3:36)**

நம்மால் அவர் மூலமாக மட்டுமே தேவனுக்கு முன்பாக நிற்க முடியும். இதுகுறித்து **உரோமர் 4:22 – 5:1**ல் பின்வருமாறு நமக்குச் சொல்லப்பட்டுள்ளது: “**ஆகையால் அது அவனுக்கு** [ஆபிரகாமுக்கு] **நீதியாக எண்ணப்பட்டது. அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டதென்பது, அவனுக்குமாத்திரமல்ல, நமக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற நமக்கும் அப்படியே எண்ணப்படும். அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக**

***எழுப்பப்பட்டும் இருக்கிறார். இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.***"

## அவரது அடையாளம்

*தேவனுடைய குமாரன் என்பதைத் தவிர, வேறு எவ்வாறும் இயேசு தம்மை ஒருபோதும் அடையாளப்படுத்திக் கொள்ளவில்லை. அவர் ஒருபோதும் தம்மை தேவன் என்றும் கூறவில்லை, தேவனுடைய ஒரு பகுதி என்றும் கூறவில்லை.*

*தான் தேவனுடைய குமாரன் என்ற கூற்றை ஆதரிக்கும் வண்ணமாக, இயேசு "**ஒருவன் எந்த அக்கிரமத்தையாவது எந்தப் பாவத்தையாவது செய்தான் என்று சொல்லப்பட்டால், ஒரே சாட்சியினால் நியாயந்தீர்க்கக் கூடாது; இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே காரியம் நிலைவரப்படவேண்டும்**" **(உபாகமம் 19:15)** என்ற நியாயப்பிரமாணத்தை முன்வைத்தார்.*

*இயேசு தம்முடைய **முதல் சாட்சியாக** யோவான் ஸ்நானகனை மேற்கோள் காட்டுகிறார்: "**என்னைக் குறித்து நானே சாட்சிகொடுத்தால் என் சாட்சி மெய்யாயிராது. என்னைக் குறித்துச் சாட்சிகொடுக்கிறவர் வேறொருவர் இருக்கிறார், அவர் என்னைக் குறித்துக் கொடுக்கிற சாட்சி மெய்யான சாட்சியென்று அறிந்திருக்கிறேன். நீங்கள் யோவானிடத்தில் ஆளனுப்பி விசாரித்தீர்கள், அவன் சத்தியத்திற்கு சாட்சிகொடுத்தான்.**" **(யோவான் 5:31 – 33)***

*இயேசுவைக் குறித்து யோவான் ஸ்நானகன் கூறின சாட்சி என்ன? **யோவான் 3:28 – 36** ஆகிய வசனங்கள் பின்வருமாறு கூறுகின்றன: "'**நான் கிறிஸ்துவல்ல, அவருக்கு முன்னாக அனுப்பப்பட்டவன்' என்று நான் சொன்னதற்கு நீங்களே சாட்சிகள். மணவாட்டியை உடையவனே மணவாளன்; மணவாளனுடைய தோழனோ அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக் குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்; இந்தச் சந்தோஷம்***

***இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று. அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும். உன்னதத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர்; பூமியிலிருந்துண்டானவன் பூமியின் தன்மையுள்ள வனாயிருந்து, பூமிக்கடுத்தவைகளைப் பேசுகிறான்; பரலோகத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர். தாம் கண்டதையும் கேட்டதையும் சாட்சியாகச் சொல்லுகிறார்; அவருடைய சாட்சியை ஒருவனும் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. அவருடைய சாட்சியை ஏற்றுக் கொள்கிறவன் தேவன் சத்தியமுள்ளவரென்று முத்திரைபோட்டு நிச்சயப்படுத்துகிறான். தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார், தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார். பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக் கொடுத்திருக்கிறார். குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்றார்.***"

*இங்கே இயேசு தேவனுடைய குமாரன் என்றும், அதற்கு மேல் எதுவும் இல்லை என்றும் யோவான் எவ்வாறு சொல்கிறார் என்பதைக் கவனித்தீர்களா?*

*பின்னர் இயேசு* ***யோவான் 5:36****ல் தம்முடைய* ***இரண்டாவது சாட்சியை*** *மேற்கோள் காட்டுகிறார்: "****யோவானுடைய சாட்சியைப் பார்க்கிலும் மேன்மையான சாட்சி எனக்கு உண்டு; அதென்ன வெனில், நான் நிறைவேற்றும்படிக்குப் பிதாவானவர் எனக்குக் கற்பித்ததும் நான் செய்துவருகிறதுமான கிரியைகளே பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறது.***"

*இயேசு என்ன "கிரியைகளைச்" செய்தார்? கர்த்தராகிய இயேசு செய்த* ***மூன்று*** *முக்கிய வகையான கிரியைகள் இருக்கின்றன. அவை:*

1. **முதல் வகை** – *அவர் செய்த பல* ***அற்புதங்கள்****.* ***மத். 16:9 – 10*** *வரையிலான வசனப்பகுதி இரண்டு அற்புதங்களைச்*

*சுருக்கமாகக் கூறுகிறது, 5,000 பேருக்கு உணவளிக்க 5 அப்பங்களும், 4,000 பேருக்கு உணவளிக்க 7 அப்பங்களும் போதுமானவையாக இருந்தது என்றும், எல்லாரும் சாப்பிட்டது போக உணவு மீதமிருந்தது என்றும் அது தெளிவாகக் கூறுகிறது.*



***Carl Bloch வரைந்த 'கிறிஸ்து வியாதியஸ்தரைக் குணமாக்குதல்'***

2. ***இரண்டாம் வகை கிரியை*** *– கர்த்தராகிய இயேசு செய்த பல* ***குணப்படுத்துதல்கள்****. இவற்றில் மிகப்பெரிய குணப்படுத்துதலாகிய பிறவியிலேயே பார்வையில்லாதிருந்த ஒரு மனிதன் சொஸ்தமடைந்து பார்வை பெற்றது குறித்து* ***யோவான் 9****ம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

3. *அவர் செய்த* ***கடைசி மற்றும் மிகப்பெரிய வகை கிரியை*** *என்னவெனில், ஏற்கனவே* ***மரித்துப்போன நபர்களை மீண்டும் ஜீவனுக்குக் கொண்டுவந்ததாகும்****.*

*அவர் யார் என்பதற்கான சான்றாக அவர் பின்வரும்* ***மூன்று*** *அற்புதங்களைச் செய்தார்.*

1. ***லூக்கா** 7:11 – 16ல், ஒரு விதவையின் மகன் மரித்துப்போய் அடக்கம்பண்ணும்படி கொண்டுபோகப்படும்போது, அந்த வாலிபனை மீண்டும் உயிர்ப்பித்தார்.*
2. ***லூக்கா** 8 :4 1 – 5 1 ல், அவர் யவீருவின் மகளை மீண்டும் உயிர்ப்பித்தார்,*



3. ***யோவான்** 11ல் ஏற்கனவே மரித்து அடக்கம் செய்யப்பட்ட லாசருவை மீண்டும் உயிர்ப்பித்தார்.*

*மதத் தலைவர்களும் மற்றவர்களும் இயேசு செய்த கிரியைகளை அடையாளங்களாக / அற்புதங்களாக (signs) அடையாளங்கண்டனர்.*

- ***யோவான்** 3 :1 – 2 ல் இயேசுவுக்கும் நிக்கோதேமுவுக்கும் இடையே நடந்த உரையாடலைக் கவனியுங்கள்: "**யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான். அவன் இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து: 'ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான்' என்றான்.**"*

- *பிறவியிலேயே பார்வையில்லாதிருந்து, பிறகு பார்வை பெற்றுக்கொண்ட மனிதனும் கூட இந்த அற்புதத்தை ஓர் அடையாளமாக (sign) அங்கீகரித்தான்:* ***யோவான் 9:30 – 33****, (குணப்படுத்தப்பட்ட மனிதன்)* ***"அதற்கு அந்த மனுஷன்: அவர் என் கண்களைத் திறந்திருந்தும், அவர் எங்கேயிருந்து வந்தவரென்று நீங்கள் அறியாதிருக்கிறது ஆச்சரியமான காரியம். பாவிகளுக்கு தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம்; ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார். பிறவிக்குருடனுடைய கண்களை ஒருவன் திறந்தானென்று உலகமுண்டானதுமுதல் கேள்விப்பட்டதில்லையே. அவர் தேவனிடத்திலிருந்து வராதிருந்தால் ஒன்றும் செய்யமாட்டாரே என்றான்."***

- *இறுதியாக, கர்த்தராகிய இயேசுவின் மூலம் தேவன் கிரியை செய்து வந்தார் என்பதை அப்போஸ்தலர் அடையாளங் கண்டு, அதனை அறிவித்தனர்:* ***அப்போஸ்தலர் 2 :2 2*** *, (அப்போஸ்தலனாகிய பேதுரு)* ***"...நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைத் தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார்...*** *"*

*இயேசு தம்முடைய* ***மூன்றாவது சாட்சியை*** *மேற்கோள் காட்டி,* ***யோவான் 5 :3 7*** *ல் பின்வருமாறு கூறுகிறார், "****என்னை அனுப்பின பிதா தாமே என்னைக் குறித்துச் சாட்சி கொடுத்திருக்கிறார்; நீங்கள் ஒருக்காலும் அவர் சத்தத்தைக் கேட்டதுமில்லை, அவர் ரூபத்தைக் கண்டதுமில்லை.****"*

*பிதாவும் இயேசுவைக்குறித்து இரண்டுமுறை சாட்சி கொடுத்தார், இரண்டுமுறையும் இயேசு தம்முடைய குமாரன் என்றே கூறினார்.*

1. *முதல் முறை இயேசுவின் ஞானஸ்நானத்தின்போது நடந்தது, இது* ***லூக்கா 3:21 – 22*** *ஆகிய வசனங்களில் பதிவு செய்யப்*

*பட்டுள்ளது: "**ஜனங்களெல்லாரும் ஞானஸ்நானம் பெற்ற போது, இயேசுவும் ஞானஸ்நானம் பெற்று, ஜெபம் பண்ணுகையில், வானம் திறக்கப்பட்டது; பரிசுத்த ஆவி ரூபங்கொண்டு புறாவைப்போல் அவர்மேல் இறங்கினது. வானத்திலிருந்து ஒரு சத்தமும் உண்டாகி: நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.**"*



2. *இரண்டாவது முறை இயேசு மறுரூபமாகும்போது நடந்தது, இது **மத்தேயு** 17:2, 5 ஆகிய வசனங்களில் பதிவு செய்யப் பட்டுள்ளது: "**அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்; அவர் முகம் சூரியனைப்போலப் பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று.... அவன் பேசுகையில், இதோ, ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள்மேல் நிழலிட்டது. இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று.**"*

*தேவனிடத்திலிருந்து வந்தாலொழிய யாரும் இம்மாதிரியான கிரியைகளைச் செய்ய முடியாது!*

## அவரது வாழ்க்கை

*உண்மையில் அவருடைய பிறப்பு பல நூற்றாண்டுகளாக ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாகும். இருப்பினும், தக்க நேரம் வந்தபோது, அவருடைய தாயாராகிய மரியாள் தான் கன்னிகையாக இருக்க தனக்கேற்பட்ட கர்ப்பத்தால் மிகவும் ஆச்சரியப்பட்டார். அவருடைய வருங்கால கணவர் அதை அறிந்ததும், அவர் அவளை மணக்க விரும்பவில்லை. அவர்கள் திருமணத்தைத் தொடர அவரைச் சமாதானப்படுத்த ஒரு தூதனுடைய தலையீடு தேவைப்பட்டது: "[யோசேப்பு]* ***அவன் இப்படிச் சிந்தித்துக்கொண்டிருக்கையில், கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு: 'தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளை சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது.'*** *" என்றார் (**மத். 1:20**).*



*பிரபஞ்சத்தின் வருங்கால இராஜா, ஓர் எளிய கன்னிகைக்கு, தங்குவதற்கு வேறு இடமின்றி, ஒரு கொட்டகையில் பிறந்தார். அவருடைய பிறப்பை முன்னறிவித்த தேவதூதனுடைய கட்டளைப்படி, அவர்கள் அவருக்கு இயேசு என்று பெயரிட்டனர், அதாவது, "யேகோவா தேவனுடைய இரட்சிப்பு" : யோசேப்பிடம்*

***“அவள் [மரியாள்] ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு 'இயேசு' என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்.”*** *என்று சொல்லப் பட்டது* ***(மத். 1:21)***

*இயேசு தமது மாற்றாந்தந்தையிடமிருந்து தச்சுத் தொழிலைக் கற்றுக்கொண்டார்; ஒரு பொருளை (ஒரு மரத் துண்டை) ஒரு வடிவத்திலிருந்து இன்னொரு வடிவத்திற்கு மிகவும் பயனுள்ள பொருளாக, அதாவது, அறைகலன்கள் (furniture), மேஜைப் பாத்திரங்கள், வீட்டு உபகரணங்கள், கருவிகள், பண்ணை கருவிகள் போன்றவையாக மாற்றும் திறன்களைக் கற்றுக்கொண்டார். அவர் பன்னிரண்டு வயது முதல் முப்பது வயது வரை இந்தத் தொழிலைக் கற்றுக்கொண்டு, அதைப் பயிற்சி செய்தார். பின்னர் அவர் அந்த உருமாற்றும் கைவினை திறமையை, தமது அன்றாட ஜீவியத்தில், அடுத்த மூன்றரை ஆண்டுகளளவும், ஊரூராய்ப் பயணஞ்செய்யும் போதகராக இருந்து, ஜனங்களிடம் பயன்படுத்தினார், பரலோகத்திலுள்ள அவரது பிதாவைக் குறித்தும், வாழ்க்கையில் தமக்கு இருக்கும் நோக்கத்தைக் குறித்தும் கேட்பவர்கள் அனைவருக்கும் போதித்து, அவர்களை மனந்திரும்பச் செய்யும்படிக்கும், மாற்றமடையும்படிக்கும் ஏதுவாக அவர்களின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தினார்.*

*யாருடைய வாழ்க்கையும் இவ்வளவு வாஞ்சிக்கப்பட்டும், இவ்வளவு நேசிக்கப்பட்டும், இருப்பினும் இவ்வளவு வெறுக்கப் பட்டும் காணப்பட்டதில்லை. கர்த்தராகிய இயேசுவைச் சந்திக்கும் ஒவ்வொரு நபரும் ஒரு முடிவை எடுக்க வேண்டும்; அது தவிர்க்க முடியாத ஒன்றாகும். ஒன்று நீங்கள் அவரை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்வது, மற்றொன்று அவரை நிராகரிப்பது. இதில் எந்த இடைப்பட்ட நிலையும் இல்லை. உலக மனுக்குலத்தைப் பொறுத்தவரை, ஆயிரமாண்டு யுகத்திலும் அதற்குப் பிறகும் ஜீவனுக்கான வாய்ப்பானது, அவர்கள் அவரைக் குறித்து எடுக்கும் முடிவைப் பொறுத்ததாயிருக்கிறது. உலக மனுக்குலம் எதிர்காலத்தில் இந்தத் தேர்வைத் தெரிவு செய்ய வேண்டியிருக்கும். இதற்கு நேர்மாறாக, கர்த்தராகிய இயேசுவின்*

*உயிர்த்தெழுதலுக்குப் பிறகு கிறிஸ்து இயேசுவுக்கு ஊழியம் செய்வதற்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த நாமும், இன்னும் பலரும், தேவனுடைய குமாரராயும், கர்த்தராகிய இயேசுவின் உடன் சுதந்தரராயும் மனித பரிபூரண ஜீவனுக்கு மேலான ஜீவனை அடைவதற்கான அழைப்புக்கு இப்போது பதிலளிக்கும் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறோம்.*

*மூன்றரை வருடங்களாக அவர் இஸ்ரயேல் தேசத்தில் நடந்து, நோயுற்றவர்களைக் குணப்படுத்தினார், பசித்தவர்களுக்கு உணவளித்தார், பரலோக இராஜ்யத்தைப் பற்றிப் போதித்தார். தேவனுக்கு ஊழியம் செய்ய முயன்ற பலரை அவர் ஒன்று திரட்டினார், அவர்களில் சீஷரைத் தேர்ந்தெடுத்தார், அவர்களில் பன்னிரண்டு பேரைத் தம்முடைய நெருங்கிய கூட்டாளிகளாகவும் அப்போஸ்தலராகவும் தெரிந்துகொண்டார்.*

*ஸ்ட்ராங் அகராதியில் (#3101) உள்ள "சீஷன்" என்பதற்கான கிரேக்க வார்த்தையின் அர்த்தம் "கற்றுக்கொள்பவன், மாணவன்" ஆகும்.*

*"அப்போஸ்தலன்" (ஸ்ட்ராங் எண் 6 5 2 ) என்பதற்கான கிரேக்க வார்த்தையின் அர்த்தம் "ஒரு பிரதிநிதி, தூதர், கட்டளை களுடன் அனுப்பப்பட்டவர் என்பதாகும்... குறிப்பாக கிறிஸ்துவின் பன்னிரண்டு அப்போஸ்தலருக்குப் பொருந்தும்."*

*இந்த மனிதனாகிய இயேசு, குரு என்றும் போதகர் என்றும், பரிசுத்தவான் என்றும் பாவி என்றும், தேவதூஷணம் செய்தவன் என்றும், குணப்படுத்துபவர் என்றும், இரட்சகர் என்றும் மேசியா என்றும் அழைக்கப்பட்டார். அவர் சபிக்கப் பட்டார், அடிக்கப்பட்டார், துப்பப்பட்டார்; அவர் ஆசீர்வதிக்கப் பட்டார், புகழப்பட்டார், கண்ணீரும் வடிக்கப்பட்டது. அவர் சாட்டையால் அடிக்கப்பட்டார், சிலுவையில் அறையப்பட்டார், வேறொருவரின் கல்லறையில் வைக்கப்பட்டார்.*

*அவருடைய சக மனிதர் என்ன சொன்னாலும் சரி, என்ன செய்தாலும் சரி, அவர் தம்முடைய நோக்கத்திற்கு உண்மையுள்ள வராக இருந்தார் – பரலோகத்திலுள்ள தம்முடைய பிதாவின் சித்தத்தைச் செய்தார். அவர் மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து*

உயிர்த்தெழுந்து, மரணத்தின் வல்லமையை ஜெயங்கொண்டார், தமக்காய் மட்டுமல்ல, மனுக்குல வரலாற்றின் போக்கில் கருத்தரிக்கப்பட்ட ஒவ்வொரு ஆண், பெண் மற்றும் குழந்தையைக்காகவும் அதனை ஜெயங்கொண்டார்.

மனுக்குல வரலாற்றின் மிக முக்கியமான நிகழ்வுகளான, உண்மையில் உலகின் போக்கையே மாற்றிய நிகழ்வுகளான இந்த நிகழ்வுகளை வெகு சிலரே அடையாளங்கண்டுகொண்டனர்.

நாம் பாடும் பாடல்களும், நாம் ஜெபிக்கிற ஜெபங்களும், நம் கர்த்தராகிய இயேசுவின் மீதும், நமக்காக அவர் அளித்த ஜீவனின் ஈவின் மீதும் நாம் கொண்டுள்ள அன்பையும் நன்றியையும் போதுமான அளவு வெளிப்படுத்துவதில்லை.

கர்த்தராகிய இயேசுவின் வாழ்க்கையை அவருடைய போதனைகளிலிருந்து பிரிப்பது மிகவும் கடினம், ஏனென்றால் **அவர் தாம் போத்தித்தபடியே வாழ்ந்தவராவார்**.

இப்படியாக அவர் போதித்த போதனைகளை நாம் சற்று நேரம் சிந்தித்துப் பார்க்க விரும்புகிறோம்:

## அவரது போதனைகள்

கர்த்தராகிய இயேசு கற்றுக்கொடுத்தவைகளைக் குறித்து ஒருவர் சிந்திக்கும்போது – ஒருவேளை மலைப்பிரசங்க வார்த்தைகள், உவமைகள், கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள் அல்லது அவரது சீஷருடனான தனிப்பட்ட ஐக்கியம் என்பவைகள் நினைவுக்கு வரும்.

கர்த்தராகிய இயேசுவின் போதனைகளை ஒருவர் எவ்வாறு முக்கியத்துவத்தின் அடிப்படையில் வரிசைப் படுத்தலாம்? ஒருவரால் ஒன்றைக்காட்டிலும் மற்றொன்று முக்கியமானதென்று குறிப்பிட முடியுமா?! அவற்றில் எது மிக முக்கியமானது என்பதை தீர்மானிக்க ஒருவர் என்ன அளவுகோல்களைப் பயன்படுத்தலாம்?

இயேசு பலதரப்பட்ட மக்களிடம் பேசினார் / போதித்தார்,

*ஆனால் அவர் வெவ்வேறு வகையான ஜனக் கூட்டத்தாருக்கு வெவ்வேறாய்ப் பேசினாரா அல்லது போதித்தாரா? அவர் மதத் தலைவர்களுக்குக் கற்பித்ததை விடவும் பொதுவான இஸ்ரயேலருக்கு வெவ்வேறாய்ப் போதித்தாரா? அவர் தமது சீஷருக்குக் கற்பித்ததை விடவும் மதத் தலைவர்களுக்கு வெவ்வேறாய்ப் போதித்தாரா? அவர் தமது அப்போஸ்தலருக்குக் கற்பித்ததை விடவும் தம் சீஷருக்கு வெவ்வேறாய்ப் போதித்தாரா?*

*அவர் அவ்வாறே செய்தார் என்பதை பலரும் ஒப்புக்கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன். பொதுவாக பார்த்தால், அது உண்மையாகவும் இருக்கிறது, அவர் தனது அப்போஸ்தலருக்குக் கற்பித்ததைப் போல பொதுமக்களுக்குக் கற்பிக்கவில்லை. இருப்பினும், அவருடைய போதனைகள் அனைத்தும், கேட்பவர் எந்த வகை மக்களாக இருந்தாலும்சரி, அவர்களை சுவிசேஷ யுகத்தில் தேவனுடைய புத்திரராக நெருக்கமான உறவுக்குள் கொண்டுவருவதற்கே கொடுக்கப் பட்டன. அதனைக் கேட்பவர் பதிலளித்து அவர்கள் கேட்டுக் கொண்டிருந்த செய்தியைப் பின்பற்றும்போது, அவர்கள் கர்த்தராகிய இயேசுவிடம் நெருங்கி வந்தார்கள். இப்படியாக அவர்கள் அவரிடம் நெருங்கி வரும்போது, அவர் அவர்களுக்கு ஆழமான சத்தியங்களைக் கற்றுக்கொடுத்தார். எனவே, கர்த்தராகிய இயேசுவை நேசித்தவர்கள், அவரை மேசியாவாக அங்கீகரித் தவர்கள், ஒரு வகுப்பாராய் இருப்பதிலிருந்து இன்னொரு வகுப்பாராய் மாறினார்கள், அதாவது பொதுவாக அவிசுவாசியாக இருப்பதிலிருந்து விசுவாசியாக மாறினார்கள். அவர்கள் பொது இஸ்ரயேலர் அல்லது மதத் தலைவர்கள் எனும் வகுப்பாரிலிருந்து சீஷர் வகுப்பாராய் மாறினார்கள், பின்னர் சிலர் சீஷர் வகுப்பாரிலிருந்து, உட்பிரிவாகிய அப்போஸ்தல வகுப்பாருக்கு மாறினார்கள். ஆனால் நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, பலர் அந்த வகையான வகுப்பாரிலிருந்து குமாரத்துவ வகுப்பாருக்கு மாறினார்கள்.*

*வெவ்வேறு வகையான வகுப்பாருக்கு அவர் என்ன கற்பித்தார் என்பதைப் பார்க்கலாம் வாருங்கள்.*

## பொதுவான இஸ்ரயேலர்

*யோவான் ஸ்நானகனின் மரணத்தைக் குறித்து கேள்விப்பட்ட பிறகு, இயேசு நாசரேத்தை விட்டு வெளியேறி, கலிலேயாவுக்குச் சென்று, கப்பர்நகூமில் குடியேறினார்.* ***மத்தேயு*** *4 : 1 7 ம் வசனத்தில், "****அதுமுதல் இயேசு: 'மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது' என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்****" என்று சொல்லப்பட்டுள்ளது*

***மத்தேயு*** *4 :2 3 - 2 5 வரையிலான வசனங்களில் நாம் பின்வருமாறு வாசிக்கிறோம், "****பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டா யிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார். அவருடைய கீர்த்தி சீரியா எங்கும் பிரசித்த மாயிற்று. அப்பொழுது பலவித வியாதிகளையும் வேதனைகளையும் அடைந்திருந்த சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர் களையும் சந்திரரோகிகளையும் திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். அவர்களைச் சொஸ்தமாக்கினார். கலிலேயா விலும், தெக்கப்போலியிலும், எருசலேமிலும், யூதேயாவிலும், யோர்தானுக்கு அப்புறத்திலும் இருந்த திரளான ஜனங்கள் வந்து, அவருக்குப் பின்சென்றார்கள்.****"*

***மத்தேயு*** *5-7 அதிகாரங்களில் மலைப்பிரசங்கத்தின் பதிவு நமக்குக் கிடைக்கிறது.* ***"அவர் திரளான ஜனங்களைக் கண்டு மலையின் மேல் ஏறினார்; அவர் உட்கார்ந்தபொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள். அப்பொழுது அவர் தமது வாயைத் திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது என்னவென்றால்:..." மத்தேயு 5:1-2***

*அவர் மலைப்பிரசங்க போதனைகள் (Beatitudes) என்று நாம் அழைக்கும் போதனையுடன் தொடங்கினார் (****மத். 5:3-12****):*

- ***"ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.***
- ***துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்.***



*Carl Bloch வரைந்த 'மலைப்பிரசங்கம்'*

- *சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.*
- *நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்.*
- *இரக்கமுடையவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.*
- *இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.*
- *சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.*
- *நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.*

- ***என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.***

- ***சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசி களையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே."***

*தொடர்ச்சியாக அவர் உப்பு மற்றும் வெளிச்சம் என்பவைகளைக் குறித்தும் போதித்தார்: "**நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது." (மத். 5:13)***

*"**மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு, பரலோகத்திலி ருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது." (மத். 5:16)***

*அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டதை விடவும், கொலை, விபச்சாரம், விவாகரத்து, உறுதிமொழிகள், நீதி மற்றும் அன்பு என்பவைகளை ஒழுங்குபடுத்தும் பிரமாணங்களில் இன்னும் அதிகமானவை இருப்பதாக அவர் போதித்தார். அவர்கள் தங்கள் கண்ணோட்டத்தை உயர்த்த வேண்டும் என்றும், நியாயப் பிரமாணத்தின் மீதான அவர்களது பார்வையை "எனக்கு என்ன அனுமதிக்கப்படவில்லை?" ("செய்யாதிருப்பாயாக") என்பதி லிருந்து "அன்பு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்கிறது?" என்று மாற்ற வேண்டும் என்றும் அவர் கற்றுக் கொடுத்தார்.*

***6 ம் அதிகாரத்தில்**, இயேசு பக்தி, சுருக்கமாக பேசுவது மற்றும் நம்பிக்கை என்பவைகளின் ஓர் உதாரணத்தை "**கர்த்தருடைய ஜெபம்**" என்றழைக்கப்படும் ஒரு விண்ணப்பத்தின் வடிவத்தில் கொடுத்தார்.*

*பின்னர், விசுவாசிகள் இந்தப் பூமிக்குரிய விஷயங்களுக்கு (செல்வம், பூமிக்குரிய நட்புகள், அதிகாரம், குடும்ப உறவுகள்,*

*சமுதாய அந்தஸ்து போன்றவைகளுக்கு) சிறிய முக்கியத்துவமே கொடுக்க வேண்டும் என்பதையும், அதைக் காட்டிலும் பரலோகப் பொக்கிஷங்களைத் தேடி நாடுவதே மிகவும் முக்கியமானது என்பதையும் அவர் கற்பித்தார்: "**பரலோகத்திலே உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்." (மத். 6:20 – 21)***

*பொருள்ரீதியான ஆஸ்திகளைக் குவித்து வைப்பதற்குப் பதிலாக, விசுவாசிகள் முதலில் தேவனுடைய இராஜ்யத்தையும் அதன் நீதியையும் தேட வேண்டும் என்றும், தேவையான மற்ற அனைத்து விஷயங்களுமே பிதாவின் சித்தத்தின்படி வழங்கப் படும் என்றும் அவர் போதித்தார்: "**முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்." (மத். 6:33)***

***7ம் அதிகாரத்தில்**, மற்றவர்களை நியாயந்தீர்க்கக் கூடாது என்று கர்த்தராகிய இயேசு வெளிப்படையான அறிவுறுத்தல் களைக் கொடுத்தார். ("Judge / குற்றவாளிகளென்று தீர்ப்பது" என்ற வார்த்தை ஸ்ட்ராங் எண்.2919-இலிருந்து வந்தது, இது 'சோதிப்பது', 'தண்டிப்பது' மற்றும் 'கண்டனம்பண்ணுவது' போன்ற அர்த்தங்களை உள்ளடக்கியிருக்கிறது.)*

*பின்னர் அவர் சுய பரிசோதனையில் ஜாக்கிரதையாக இருப்பதன் முக்கியத்துவத்தைக் குறித்தும் (முதலில் உன் கண்ணிலிருக்கும் உத்திரத்தை அகற்று), அதே போல் கர்த்தருடைய சித்தத்தையும், அதிகமான பரிசுத்த ஆவியையும் நாடுவது குறித்தும் கற்றுக்கொடுத்தார். "**கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப் படும்." (மத். 7:7)***

*அவர் தொடர்ந்து பொன்னான பிரமாணம் குறித்த பாடத்தைக் கற்றுக்கொடுத்தார்: பரலோகத்திலிருக்கிற நம் பிதா,*

*அவரைப் பின்தொடர்ந்து செல்வதற்காய் நாம் ஏறெடுக்கும் முயற்சிகளுக்காய், ஒரு பெற்றோர் தனது குழந்தைக்கு அளிப்பதைப் பார்க்கிலும் மிகவும் அதிகமான வெகுமதியை அளிப்பவராய் இருக்கிறார்.* ***“ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்.” (மத். 7:12)***

*பின்னர் கர்த்தராகிய இயேசு முடிவெடுப்பதில் ஒருவருக்கு இருக்கும் சுயாதீனத்தைக் (discretion) குறித்து கற்பித்தார்; ஒருவன் அறிக்கை செய்வதை மட்டும் வைத்து அல்ல, மாறாக அவனுடைய கனிகளின்படி நிதானித்துப் பார்க்க வேண்டும். தேவனை தாங்கள் அறிந்திருப்பதாகக் கூறுபவர்களும், தேவன் தான் யாரை அறிந்திருப்பதாகக் கூறுகிறாரோ அவர்களும் ஒன்றல்ல.* ***“பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கிக் கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.” (மத். 7:21)***

*இந்த மலைப்பிரசங்கம் ஓர் உவமையுடன் முடிகிறது: கிறிஸ்து இயேசு எனும் அஸ்திபாரத்தின் மீது விசுவாசம் மற்றும் குணாதிசயத்தின் கட்டமைப்பைக் கட்டுபவர்கள் புயல்களிலிருந்து தப்பித்துக்கொள்கிறார்கள், அவ்வாறு செய்யாதவர்கள் – தப்பிப்பிழைக்க மாட்டார்கள்!* ***“பெருமழை சொரிந்து, பெரு வெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும் அது விழவில்லை; ஏனென்றால் அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான்.” (மத். 7:25 – 26)***

*இந்தப் போதனைகள் கேட்பவரை உயர எழும்பச் செய்து, இன்னும் நெருங்கி வரும்படி செய்வதையே நோக்கமாகக் கொண்டிருந்தன. அவை குணலட்சணம் மற்றும் நடத்தை பற்றிய அடிப்படை சத்தியங்களை உள்ளடக்கியிருந்தது.*

*இப்போது, அடுத்த வகையான வகுப்பாரைக் கருத்தில் கொள்வோமாக...*

## மதத் தலைவர்கள்

*நிக்கொதேமுவுக்கும் கர்த்தராகிய இயேசுவுக்கும் இடையிலான சம்பாஷணையைக் குறித்து நாம் அறிந்திருக்கலாம். நிக்கொதேமு இயேசுவிடம் வந்து, அவர் தேவனால் அனுப்பப்பட்ட ஒரு போதகர் என்பதை அறிந்திருப்பதாக தெரிவித்தார். அதற்கு இயேசு,* ***"...ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தைக் காணமாட்டான்..."*** ***(யோவான்*** *3 :3 ) என்று பதிலளித்தார், அதாவது உண்மையில், இருதயம் மாற்றமடையாமல் (பரிசுத்த ஆவியின் ஜெநிப்பித்தல்) இல்லாமல் கிறிஸ்துவை அங்கீகரிப்பதில் / ஒப்புக்கொள்வதில் எந்தப் பலனும் இல்லை என்று நிக்கொதேமுவிடம் கூறினார்.*



***Henry Ossawa Tanner* வரைந்த 'இயேசுவும் நிக்கொதேமுவும்'**

*தொடர்ந்து, கர்த்தராகிய இயேசு நிக்கொதேமுவுக்கு இன்னும் சில காரியங்களைப் போதித்தார். "What Pastor Russell Said" எனும் கேள்வி புத்தகத்தில், பக்கம் 796:2ல் இருந்து நாம் பின்வருவனவற்றை மேற்கோள்காட்டுகிறோம்:*

*"...எந்த யூதனும் கர்த்தராகிய இயேசுவைப் பின்பற்றுபவராகி,*

*ராஜ்யத்திற்குள் நுழைய முடியாது, முதலில் அவர் இந்த சீர்திருத்தத்தை (கடவுளிடம் திரும்புதல் மற்றும் இதயம் மற்றும் வாழ்க்கையின் மனந்திரும்புதல் மற்றும் சீர்திருத்தத்தை அங்கீகரித்தல்) அனுபவித்து, 'தண்ணீரால் பிறந்தார்' என்று ஞானஸ்நானம் பெறாத வரை, இதற்கு கூடுதலாக ஆவியின் பிறப்பு இருக்க வேண்டும், பின்னர் உயிர்த்தெழுதலில், ஆவி இயல்புக்கு பிறப்பு - 'ஆவியால் பிறந்தவர்'. இதயம் மற்றும் மனதின் இந்த முழுமையான சீர்திருத்தத்தை அனுபவிப்பவர்கள், உயிர்த்தெழுதலில் 'மாற்றப்பட்டவர்கள்' மட்டுமே கடவுளின் ராஜ்யத்தில் நுழைவார்கள்."*

*பொதுவாக, நிக்கொதேமுவின் விசுவாசக் குறைச்சல் அல்லது அவர் தைரியத்தில் குறைவுப்பட்டிருந்தது குறித்து அதிகம் கூறப்பட்டுள்ளது, ஆனால் கர்த்தராகிய இயேசு அவ்வாறு எதுவும் சொல்லவில்லை! நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், மற்ற பரிசேயருக்கு முன்பாக இயேசுவுக்காக நின்றவர் நிக்கொதேமு, கர்த்தராகிய இயேசுவை அடக்கம் செய்தபோது, நியாயப்பிரமாணத்தின் கீழ் தன்னைத் தீட்டும் அசுத்தமும் படுத்திக் கொண்டவர் நிக்கொதேமு (இது அவரை பஸ்காவில் பங்கேற்கவிடாமல் தடுத்தது).*

*இதனையும், **மத்தேயு** 23 ல் மதத் தலைவர்களைப் பற்றி கர்த்தராகிய இயேசு கூறியதையும் வேறுபடுத்திப் பாருங்கள் – பெரும்பாலும் அந்த அதிகாரத்தில் அவர்களின் மாய்மாலம், போதனைகள் மற்றும் ஆவிக்குரிய குருட்டுத்தன்மை என்பவைகளைக் கண்டனம் பண்ணியிருப்பார். அதில் அவர் எட்டு முறை **'ஐயோ'** என்றும், அவர்களை நான்கு முறை '**குருடர்**' என்றும், இரண்டு முறை '**மதிகேடர்**' என்றும், தலா ஒரு முறை '**சர்ப்பங்கள்**' மற்றும் '**விரியன் பாம்புக்குட்டிகள்**' என்றும் அழைந்திருந்தார்.*

*மதத் தலைவர்கள் என்பவர்கள் காரியங்களை நன்றாக அறிந்திருக்க வேண்டும் என்பதால் அவர் (எல்லாரைக்காட்டிலும்) அவர்களிடமே மிகவும் அதிக கடுமையுடன் நடந்து கொண்டார்; அவர்கள் மேய்ப்பராகவும் போதகராகவும் இருந்தனர், மேலும்*

அவர்கள் பார்த்ததாகக் கூறினர், (உண்மையில் அவர்கள் அவ்வாறு இல்லை). இந்தக் காரணங்களுக்காக இயேசு அவர்களை இஸ்ரயேல் தேசத்திற்கு முன்பாக பதில் சொல்ல கடமைப் பட்டுள்ள பொறுப்பாளிகளாக நிறுத்தினார்.

மதத் தலைவர்களில் பலர் மற்ற இஸ்ரயேலரைப் போலவே அவர் சொன்ன போதனைகளைக் கேட்டார்கள், ஆனால் அவர்களின் ஸ்தானமும் பெருமையும் அவர்களை அவரிடம் நெருங்கி வரவும், தங்களுடைய அணுகுமுறையை மாற்றிக்கொள்ளவும் தடையாக இருந்தன. எனவே, அவர்களின் இருதயக் கடினத்தன்மை மற்றும் பார்வைக் குறைபாடுக்காக எஜமானர் அவர்களை ஒட்டுமொத்தமாகக் கண்டித்தார்.

நாம் கருத்தில் கொள்ள விரும்பும் மூன்றாவது வகையான வகுப்பார்...

## சீஷர்கள்

### சுயத்தை மறுதலிப்பது / வெறுப்பது

இது சம்பந்தமான போதனை குறித்து பின்வரும் மூன்று உதாரணங்களைக் கூர்ந்து கவனியுங்கள்.

1. ***"அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்." (மத்தேயு 16:24)***

2. ***"அதற்கு இயேசு: கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல என்றார்." (லூக்கா 9:62)***

3. ***"அப்பொழுது இயேசு ஜனங்களை அனுப்பிவிட்டு வீட்டுக்குப்போனார். அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து, நிலத்தின் களைகளைப்பற்றிய உவமையை எங்களுக்கு வெளிப்படுத்தவேண்டுமென்று கேட்டார்கள்." (மத்தேயு 13:36)***

*இயேசுவின் போதனைகளில் காணப்படும் அழுத்தம் மற்ற வகையான வகுப்பாரிடமிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பதை கவனித்தீர்களா? பொதுவான இஸ்ரயேலருக்கு அவர் ஒழுக்கம், கொள்கைகள், குணலட்சணம் மற்றும் நடத்தை என்பவைகளைப் போதித்தார். சீஷருக்கு அவர் சுயத்தை மறுதலிப்பது/வெறுப்பது, தியாகம் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றைப் போதித்தார். இயேசு பொது ஜனங்களிடம் பல உவமைகளைப் பேசியபோதும், அது சம்பந்தமான விளக்கங்களை அவர் தமது சீஷருக்கே வழங்கினார்.*

***யோவான் 6**ல் பதிவு செய்யப்பட்டுள்ளபடி, இயேசுவுக்கும் அவருடைய சீஷருக்கும் இடையிலான உரையாடலை நீங்கள் அறிந்திருக்க வாய்ப்புள்ளது. நீண்ட அந்த உரையாடலின் ஒருசில பின்வரும் பகுதிகளைக் கவனியுங்கள்:*

***“'நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே' என்றார். ... இயேசு அவர்களை நோக்கி: 'நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன். என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது. என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன்.' ...அவருடைய சீஷரில் அநேகர் இவைகளைக் கேட்டபொழுது, இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் என்றார்கள். சீஷர்கள் அதைக்குறித்து முறுமுறுக்கிறார்களென்று இயேசு தமக்குள்ளே அறிந்து, அவர்களை நோக்கி: இது உங்களுக்கு இடறலாயிருக்கிறதோ? ... ஒருவன் என் பிதாவின் அருளைப் பெறாவிட்டால் என்னிடத்திற்கு வரமாட்டான் என்று இதினிமித்தமே உங்களுக்குச் சொன்னேன் என்றார்.” (யோவான் 6:51, 53-56, 60, 61, 65)***

*இந்த உரையாடலின் விளைவாக என்ன நடந்தது என்பது குறித்து அடுத்த வசனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது:* ***"அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போனார்கள்." (யோவான் 6:66)***

*அவர் கோதுமையைத் தூற்ற வேண்டியிருந்தது.* ***மத்தேயு 22:14****ல் இயேசு சொன்னது நம் நினைவுக்கு வருகிறது, "****அழைக்கப் பட்டவர்கள் அநேகர், தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களோ சிலர்.****"*

*அப்போஸ்தலர் கடைசி வகையான வகுப்பார் ஆவார்கள், இதில், அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக ஓடிக்கொண்டிருப்பவர்களும் அடங்குவர்.*

## அப்போஸ்தலர்

### அன்பு

*அன்பெனும் தாத்பரியமே ஆண்டவர் இயேசுவின் முக்கிய போதனைகளில் ஒன்று என்பதை பெரும்பாலானோர் ஒப்புக் கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன்.*

*அந்த வகுப்பார் அவருக்கு நெருக்கமாகும்போது இயேசு இன்னும் உயரிய போதனையைக் கொடுத்தார் என்பதை நாம் முன்னரே குறிப்பிட்டோம். அதுசம்பந்தமான ஓர் உதாரணத்தை இங்கே நாம் காணலாம்: நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள ஒருவர் என்ன செய்ய வேண்டும் என்று ஒரு மதத் தலைவர் கேட்டபோது இயேசு எவ்வாறு பதிலளித்தார் என்பதைக் கவனியுங்கள்.*

***"அப்பொழுது நியாயசாஸ்திரி ஒருவன் எழுந்திருந்து, அவரைச் சோதிக்கும்படி: 'போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு நான் என்ன செய்யவேண்டும்' என்று கேட்டான். அதற்கு அவர்: 'நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது? நீ வாசித்திருக்கிறது என்ன' என்றார். அவன் பிரதியுத்தரமாக: 'உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழுஆத்துமாவோடும், உன் முழுப்பலத் தோடும் உன் முழுச்சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில்***

***அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக' என்று எழுதியிருக்கிறது என்றான். அவர் அவனை நோக்கி: 'நிதானமாய் உத்தரவு சொன்னாய்; அப்படியே செய், அப்பொழுது பிழைப்பாய்' என்றார்." (லூக்கா 10:25 – 28)***

*அவர் தம்முடைய அப்போஸ்தலருடன் மேல் வீட்டறையில் இருந்தபோது, பின்வருமாறு கூறினது உங்களுக்கு நினைவிருக்கலாம்,* ***யோவான் 13:34, 35:*** *"**நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்.**"*

*இந்தப் போதனை மிகவும் முக்கியமானதாக இருந்ததால், இயேசு அதனை மூன்று தரம் தம்முடைய அப்போஸ்தலரிடம் கூறினார், மேலும் அவர் அதை மேல் வீட்டறையில் தொடங்கி (**யோவான் 13:34**), தோட்டத்திற்குச் செல்லும் வழி வரை தொடர்ந்த உரையாடலில் மட்டுமே கூறினார். (**யோவான் 15:12, 17**) இது **அவருடைய கடைசிப் போதனைகளில் ஒன்றாகும்.***

*ஒருவேளை இது மிகவும் முக்கியமான ஒன்றால் இருந்திருந்தால், நித்திய ஜீவனைப் பற்றிக் கேட்ட நியாயசாஸ்திரியிடம் இயேசு ஏன் இதைக் குறித்து கூறவில்லை? ஏன் அவருடைய அப்போஸ்தலர்களே புதிதான கட்டளையைப் பற்றி முதன்முதலில் கேள்விப்படுபவர்களாக இருந்தனர்?*

*ஒருவேளை அது குமாரத்துவத்திற்கென்று அழைக்கப் படாதவர்களுக்குப் பொருந்தாததால், அதுகுறித்து தெரிவிக்கப் படாமல் இருந்திருக்கலாம்; பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக ஓடுபவர்களுக்கு மட்டுமே இது பொருந்தும். அந்தக் காலகட்டத்தில் இருந்த நியாயசாஸ்திரியைப் போல, பரம அழைப்பின் பந்தய சாலையில் ஓடாதவர்களாகிய மனுக்குலத்திற்கு, ஆயிரமாண்டு யுகமாகிய தேவனுடைய இராஜ்யத்தில் நித்திய ஜீவன் என்பது இந்த இரண்டு கட்டளைகளையும் ஏற்றுக் கொண்டு வாழ்வதைச் சார்ந்ததாயிருக்கும் – எனவே, இயேசுவின்*

*பதில் அவ்வாறு இருந்தது. ஆனால், அப்போஸ்தலரும் திருச்சபையும், தேவனுடைய சுதந்தரராகவும் கிறிஸ்துவுடைய உடன் சுதந்தரராகவும் மாறுவதற்கு, அவர்களிடம் ஒரு தன்னலமற்ற, தேவனைப் போன்ற அன்பு காணப்பட வேண்டும்.*

*இது அவர்களின் மனதில் மிகவும் ஆழமாக பதிந்ததால், பல ஆண்டுகளுக்குப் பிறகு, அப்போஸ்தலன் யோவான் தனது நிருபமாகிய **1 யோவான் 4:21 – 21** வரையிலான வசனப்பகுதியில் அன்பின் முக்கியத்துவத்தைக் குறித்து பின்வ்ருமாறு எழுதுகிறார்: "**தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்? தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூரவேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்.**"*

## *ஊழியனுக்குரிய குணங்களுடன் இருப்பது (Servanthood)*

*கர்த்தராகிய இயேசு அப்போஸ்தலருக்குக் கொடுத்த மிகவும் முக்கியமான போதனைகளில் ஒன்று ஊழியக்காரனுக்குரிய குணங்களுடன் இருப்பது (Servanthood) பற்றியதாகும்.*

*ஊழியனுக்குரிய குணங்களுடன் இருப்பது (Servanthood) குறித்து கர்த்தராகிய இயேசு என்ன போதித்தார் என்பதைக் குறித்து பின்வருமாறு வாசிக்கலாம்.*

***"அப்பொழுது, இயேசு அவர்களை** [செபதேயுவின் குமாரரை] **கிட்டவரச்செய்து: புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், பெரியவர்கள் அவர்கள் மேல் கடினமாய் அதிகாரஞ்செலுத்துகிறார்கள் என்றும், நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக் கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக் கடவன். அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி***

***வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார் என்றார்." (மத்தேயு 20:25 – 28)***

***மத்தேயு 23:11 – 12*** *ஆகிய வசனங்களில், "****உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக் கடவன். தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்****" என்று கூறினார்.*

***"பின்பு பாத்திரத்தில் தண்ணீரை வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்." (யோவான் 13:5)***



***"ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்." (யோவான் 13:14)***

*ஊழியனுக்குரிய குணங்களுடன் இருப்பது (Servanthood) என்பது மனத்தாழ்மையுள்ள மனநிலையைக் குறிக்கின்றது; அது மற்றவர்களுக்கு ஊழியனாக இருக்கும் மனநிலையைக் குறிக்கிறது. கிறிஸ்துவின் பின்னடியார்களுக்கு இது பரலோகத்திலுள்ள நம்*

பிதாவுக்குக் கீழ்ப்படிந்திருப்பதையும், அடுத்து கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்திருப்பதையும், பின்னர் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருப்பதையும் அர்த்தப்படுத்துகின்றது. இது சுயத்திற்கு ஊழியம் செய்வதை அல்ல, மாறாக மற்றவர்களுக்கு ஊழியம் செய்வது பற்றியதாகும். இது மற்றவர்களுக்காயும், மற்றவர்களுக் கென்றும் ஊழியம் செய்வதற்கு தன்னை மனமுவந்து ஒப்புக்கொடுப்பதாகும், அதாவது மற்றவருக்குச் சிறந்ததைச் செய்து கொடுப்பதற்குத் தேவையான சகலத்தையும் செய்வதாகும்.

ஆம், கர்த்தராகிய இயேசு வெவ்வேறு வகையான வகுப்பாருக்கு அவர்களுக்குரிய போதனையைப் போதித்தார் – ஆனால் அவருடைய போதனைகள் அனைத்தும் ஒரே குறிக்கோளையும் நோக்கத்தையும் கொண்டிருந்தன! உண்மையில் அவர் அந்த 'உண்மையான உத்தம இஸ்ரயேலரை' அழைத்து, எதிர்காலத்தில் உண்மையான விசுவாசத்தில் தலைவர்களாக அவர்கள் வகிக்கப்போகும் பாத்திரங்களுக்காய் அவர்களை ஆயத்தப்படுத்தி வந்தார். ஒவ்வொரு வகுப்பாருக்குமான அவருடைய போதனைகள் மிகவும் குறிப்பிட்டதாகவும், எதிர்காலத்தில் அவர் இல்லாமல் அவர்கள் ஆற்ற வேண்டி யிருக்கும் பணிக்காக அவர்கள் ஆயத்தப்படுவதை கட்டாயமாக கேட்பதாகவும் மாறியது.

## அவரது அழைப்பு

கர்த்தராகிய இயேசுவிடம் வந்தவர்கள், அவர் மற்ற எல்லோரையும் விட வித்தியாசமானவர் என்பதை உணர்ந்து கொண்டனர். அவர் அதிகாரமுள்ளவராய்ப் போதித்தார், மதத் தலைவர்களை எதிர்த்து நின்றார்; ஆவிக்குரிய சத்தியங்களைப் போதிப்பதற்காக, அன்றாட சூழ்நிலைகளைப் பயன்படுத்தி உவமைகளாகச் சொன்னார், தமது செய்தியைக் கேட்பவர்களைச் சிந்திக்க வைத்தார். மேலும், அவர் குணப்படுத்துவதன் மூலம் பலருக்கு நிவாரணம் அளித்தார், இருப்பினும் அவர் இருதயத்தில் சுத்தமுள்ளவர்களையே "**உத்தம இஸ்ரயேலரையே**" தேடிக் கொண்டிருந்தார்.

*திருச்சபையின் அழைப்பைப் பற்றிய தலைப்பை நீங்கள் தியானிக்கையில், குமாரத்துவத்திற்கான அழைப்பைப் பற்றியும், திருச்சபை எனும் சரீரத்தில் அவருடன் பங்கேற்பதைப் பற்றியும் கர்த்தராகிய இயேசு வெகு குறைவாகவே கூறியிருந்தார் என்பதை உங்களால் உடனே உணர்ந்துகொள்ள முடியும். பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட பிறகு, அவருடைய அப்போஸ்தலர் அவருக்காக அந்த வேலையைச் செய்தார்கள், இந்த அழைப்பு பற்றிய உபதேசத்தை அவர்கள் நமக்குப் போதித்து விளக்கினார்கள்.*

*ஆனால் கர்த்தராகிய இயேசு, இந்த அழைப்பை நுட்பமான மறைவான முறையில் நமக்குச் சொல்லியிருந்தார். அன்றைய மற்றும் எதிர்கால சீஷருக்காக ஏறெடுக்கப்பட்ட மிகவும் நெருக்கமான ஜெபம் குறித்து பதிவாகியுள்ள* ***யோவான் புத்தகத்தின் 17ம் அதிகாரத்தில்*** *இது பதிவு செய்யப்பட்டுள்ளது. முழு அதிகாரமுமே பொருந்தும், இருப்பினும்* ***யோவான் 17:13 – 26*** *வரையிலான வசனங்களைச் சிந்தித்துப் பார்ப்போமாக.*

***"இப்பொழுது நான் உம்மிடத்திற்கு வருகிறேன்; அவர்கள் என் சந்தோஷத்தை நிறைவாய் அடையும்படி உலகத்தில் இருக்கையில் இவைகளைச் சொல்லுகிறேன். நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்; நான் உலகத்தானல்லாதது போல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது. நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும் படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். நான் உலகத்தானல்லாதது போல, அவர்களும் உலகத்தாரல்ல. உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம். நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன். அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்த மாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத் தானே பரிசுத்தமாக்குகிறேன். நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளு கிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர்***

***என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறது போல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும் படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன். நீதியுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை, நான் உம்மை அறிந்திருக்கிறேன்; நீர் என்னை அனுப்பினதை இவர்களும் அறிந்திருக்கிறார்கள். நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும்படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும், உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்; இன்னமும் தெரியப்படுத்துவேன் என்றார்." யோவான் 17:13-26***

## அவரது மரணமும் மரபுரிமை சொத்தும்

*இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு சுமார் ௭௫௦ ஆண்டுகளுக்கு முன்பு (கி.மு. எட்டாம் நூற்றாண்டில்) ஏசாயா தீர்க்கதரிசி கர்த்தராகிய இயேசுவின் மரணத்தைப் பற்றிய தீர்க்கதரிசனத்தை உரைத்திருந்தார். இது குறைந்தது நாற்பது ஆண்டுகளளவும் நீடித்த இஸ்ரயேல் மற்றும் யூதாவின் நான்கு இராஜாக்களாகிய உசியா, யோதாம், ஆகாஸ் மற்றும் எசேக்கியா என்பவர்களுடைய காலத்தில் எழுதப்பட்ட ஒன்றாகும்.* ***ஏசாயா*** ***௫௩ம்*** *அதிகாரமானது 'அந்தப் பாடுபடும் ஊழியன் பற்றிய மாபெரும் தீர்க்கதரிசனம்' ('the Great Prophecy of the Suffering Servant') என்றழைக்கப்படுகிறது.*

***ஏசாயா 53:5,6, 8, 12*** *ஆகிய வசனங்களில் பின்வருமாறு வாசிக்கின்றோம்: "****நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்***

*பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப் பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித்திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். ... இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார்; அவருடைய வம்சத்தை யாரால் சொல்லி முடியும்; ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டு போனார்; என் ஜனத்தின் மீறுதலினி மித்தம் அவர் வாதிக்கப்பட்டார். அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார்.''*



பொதுவாக, கர்த்தராகிய இயேசுவிற்கு நடந்த விசாரணைகள் மற்றும் சோதனைகள் என்பவைகளில் வெளிப்பட்ட நியாயமற்றத்தன்மை மற்றும் சட்டவிரோதம் குறித்தும், சதுசேயரும் பரிசேயரும் எவ்வாறு ஒரு பொதுவான எதிரியை அகற்றுவதற்காக ஒன்றுகூடினர் என்பது குறித்தும், பொய்ச் சாட்சிகள் குறித்தும், பரபாசை விடுவிக்கும்படி ஜனக்கூட்டம்

*கூச்சலிட்டது குறித்தும், சிலுவை மரணத்தின் கொடூரமான செயல்முறை குறித்தும் அதிகம் சொல்லப்பட்டுள்ளது.*

*இவை அனைத்தும் உண்மைதான் என்றாலும், நினைவில் கொள்ள வேண்டிய மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவிடம், எந்த நேரத்திலும் இந்தச் செயல் முறையை நிறுத்துவதற்கான பரலோக மற்றும் மன ரீதியான உதவி ஆதாரங்கள் காணப்பட்டன என்பதாகும் – ஆனால் அவர் அவைகளைப் பயன்படுத்தவில்லை! அவரால் பயன்படுத்தியிருக்க முடியும் என்றாலும், அவர் அவ்வாறு செய்யவில்லை!* ***அவ்வாறு செய்யாமல் ஈடுபலியாக தம் உயிர்க் கொடுத்த நேயனுக்காய் நாம் எவ்வளவாய் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம்!!***

*அவரைப் பற்றி அப்போஸ்தலர் என்ன சொல்கிறார்கள் என்பதைக் கவனியுங்கள்:*

***"அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள் என்றான்." (அப்போஸ்தலர் 10:43)***

***"ஆதலால் சகோதரரே, இவர் மூலமாய் உங்களுக்குப் பாவமன்னிப்பு உண்டாகும் என்று அறிவிக்கப்படுகிறதென்றும், மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே நீங்கள் எவைகளினின்று விடுதலையாகி நீதிமான்களாக்கப்படக்கூடாதிருந்ததோ, விசுவாசிக் கிறவன் எவனும் அவைகளினின்று இவராலே விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான் என்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக் கடவது." (அப்போஸ்தலர் 13:38-39)***

***"நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கி யங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து," (1 கொரி. 15:3-4)***

***"அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே, இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு***

***இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது." (எபே. 1:7)***

***"நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும் படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்." (1 பேதுரு 2:24)***

*கர்த்தராகிய இயேசு நமக்கு விட்டுச் சென்ற மரபுரிமை சொத்து குறித்தும், அதை நாம் எவ்வாறு சிறப்பாகப் பயன் படுத்தலாம் என்பது குறித்தும் அப்போஸ்தலனாகிய பவுல் என்ன கூறுகிறார் என்பதைக் கவனியுங்கள்:*

***"தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே, பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்துமூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார். ...எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்து வத்துக்கும், இம்மையில்மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றி ருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத் தக்கதாக, அவரை உன்னதங்களில் தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்." (எபே. 1:4 – 6, 20-23)***

*"[சபை ஆவதற்காய்]* ***விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்; அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்." எபி. 12:2***

## முடிவுரை

*மனித இனத்தின் மீது இவ்வளவு பெரிய தாக்கத்தை வேறெந்த நபரும் ஏற்படுத்தியதில்லை. மனுஷரில் எவருக்குமே இம்மாதிரி தங்களுடைய பிறப்பு குறித்தும், தங்களுக்கான நோக்கம் குறித்தும், தங்களுடைய மரணம் குறித்தும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தீர்க்கதரிசனம் உரைக்கப்படவில்லை. இவரைப் போல வேறு யாருக்கும் தேவனுடைய அங்கீகாரம் கிடைத்ததில்லை. மனித இனத்திற்கான மீட்கும் பொருளாக, தங்கள் வாழ்க்கையை, ஒரு பரிபூரண வாழ்க்கையை, வேறு யாரும் தியாகம் செய்யவில்லை. நாம் ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்காகவும், பின்னர் தேவனுடைய வலது பாரிசத்தில் தெய்வீக ஜீவனை வெகுமதியாக பெற்றுக் கொள்வதற்காகவும் வேண்டி, இவரைப் போல வேறு யாருமே ஆவிக்குரிய தளத்தை விட்டுவிட்டு, மனிதனாக மாறி, அந்த மனித ஜீவனை மரிக்கச் செய்ததுமில்லை.*

*நாம் அவரை அன்புகூருவதாலேயே அவருடைய வாழ்க்கையையும் போதனைகளையும் நாம் தியானிக்கச் செய்கிறோம், அத்துடன் "**அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்.**" **1 யோவான் 4:19***

*அவருடைய இராஜ்யத்தில் அவருடன் இருக்கவும், தேவனுடைய புத்திரராக உடன் சுதந்தரராக இருக்கவும், உங்களுக்கும் எனக்கும் வாய்ப்பு உள்ளது. இதன் அர்த்தம் நமக்கு உண்மையிலேயே விளங்குகிறதா? நாம் நம் வாழ்நாளில் பல வருடங்களைச் செலவழித்து, அவருக்கு ஊழியம் செய்ய முயற்சி செய்து வருகிறோம், நம்மால் முடிந்தளவிற்குச் சிறப்பாக ஊழியம்செய்தாலும்கூட, நம்மால் ஒருபோதும் மிகச் சிறந்த ஊழியராக இருக்க முடிவதில்லை.*

*இப்படி நீங்கள் நம் கர்த்தராகிய இயேசுவைப் பின்தொடர்ந்துசெல்லும்போது, அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றவே நாங்கள் உங்களை ஊக்குவிக்கிறோம்:*

*அவருடைய அடிச்சுவடுகளில் நடந்திடுங்கள், அவற்றிலிருந்து சற்றும் விலகிச் சென்று விடாதீர்கள்.*

**ஒரு குழந்தை தனது பெற்றோரின் கையைப் பிடிப்பதற்கும் மேலாய் அவருடைய கையை இறுக்கமாகப் பிடித்துக் கொள்ளுங்கள்.**

- ***"...வசனத்தினாலும், நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்." (1 யோவான் 3:18)***
- ***"சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கக் கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்." (எபே. 4:31, 32)***
- ***"ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்." (1 பேதுரு 5:6)***
- ***"தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, நித்திய ஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப்பெறக் காத்திருங்கள்." (யூதா 1:21)***

*இந்நேரம் வரையிலும் நாம் அநேக காரியங்களை எண்ணிப் பார்த்தோம், முன்பு மேற்கோள் காட்டிய அதே வசனத்துடன் நிறைவு செய்கிறோம்,* ***"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப் படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப் படவும் இல்லை என்றான்." – அப்போஸ்தலர் 4:12***

*நாம் இதை நிஜமாகவே, உண்மையிலேயே நம்புகிறோம் என்பதை பிரதிபலிக்கும் வகையில் நம் வாழ்க்கையை வாழ்வோமாக!* ***ஆமென்!***

BIBLE STUDENTS
Food for New Creature